**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 37/2022**

**Date :02.03.2026**

**வா.சா. 1 தமிழ்ச் செல்வன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

வாசாஆ 1 கிரய ஆவணத்தின் முன் பத்திரம் 1972 ல் உள்ள கூட்டு அவகாச பத்திரம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ 1 பக்கம் 4 ல் வாசாஆ 1ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து இதற்கு முன்பு யாரிடமிருந்து கிடைக்கப்பெற்றது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1972 ல் சொத்துக்கள் அனைத்தும் வயலாக இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு விலைக்கு கொடுத்தவர்கள் உயிருடன் இருக்கிறார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முன்பத்திரங்களை நான் படித்து பார்த்து வாங்கினேனா என்றால் இல்லை.

முன்பத்திரத்தை படித்து பார்க்காததால் வாசாஆ 1ல் குறிப்பிடப்பட்டுள்ளது சரியா தவறா என்றால் எனக்கு தெரியாது. வாசாஆ 1 எழுதும் சமயத்தில் ரீசர்வே முடிவுக்கு வந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ 1ன் எல்கையில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்கள் வைத்து நான் ரீசர்வே மூலம் அளவீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 1ன் எல்கையில் குறிப்பிட்டுருக்கும் சர்வே எண்கள் கொண்ட சொத்து யாருடையது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாசாஆ 1ல் குறிப்பிட்டுள்ள அளவின் படி சர்வேயர் நிலத்தை அளந்தாரா என்றால் அளந்தார்.

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்திருக்கும் புகைப்படங்கள் வழக்கு பட்டிகை சொத்திற்கான புகைப்படங்கள் என்றால் 2 ,3,5,6,7 புகைப்படங்கள் மட்டும் வழக்கு பட்டிகை சொத்திற்கானது. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் ரீசர்வே 14,2,3

ற்கு மேற்காக வாய்க்கால் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது தவறு. ரீ சர்வே வரைபடத்தில் வாய்க்கால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எல்கை மற்றும் அளவுகள் குறிப்பிடாத ஒரு கோடு வரையப்பட்டுள்ளது. சர்வேயர் இடத்தை அளந்தபோது நான் இருந்தேன் என்றால் சரிதான். சர்வேயர் மேற்படி காலை நிலவியல் கால் என்று குறிப்பிட்டுள்ளார். நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் குறிப்பிட்டுள்ள எல்கையின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது.

நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்கு மூலத்தில் எனது சொத்தான சர்வே எண் 491/3 யை ஒட்டி தெற்கே 12 அடி பாதை உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது தவறு. எனது சொத்தினை தொட்டு எந்த பாதையும் கிடையாது என்றால் சரிதான். நிலவியல் காலை தொட்டு 2 பக்கமும் வரப்பு உள்ளது என்றால் சரியல்ல. ஒரு பக்கம் தான் வடக்கிலிருந்து தெற்காக செல்கிறது.

வடக்கிலிருந்து தெற்காக எனது சொத்தினை தொட்டு வடக்கு பக்கம் ஒரு வரப்பு உள்ளது அதில் தண்ணீர் செல்வதிலே ஒரு ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். என் வீட்டிற்கு தெற்கே பிரதிவாதிகளின் மனை என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்தினை தொட்டும் மேற்கே ஒரு வரப்பு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்கு மூலத்தில் ஆணையர் குறிப்பிட்டுள்ள நீர் தடத்திற்கு என்னால் எவ்வித தடஸ்தமும் கிடையாது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேலும் நீர் செல்லும் வழித்தடத்தை முயற்சி செய்ய மாட்டேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 100 ஆண்டிற்கு மேலாக வழக்கு பட்டிகை சொத்தில் இருக்கும் வயலின் கால் வழியாக தண்ணீர் கொண்டு போவதற்கும் மற்றும் வரப்பு வழியாக நடப்பதற்கும் அனைவருக்கும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

வாசாஆ 1 மோசடியான பத்திரம் உண்மையை மறைத்து முன்பத்திரங்களை மறைத்து எழுதப்பட்டது என்றால் சரியல்ல. வாசாஆ 2 மூலம் கால் வழியாக செல்வதற்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. டேனியல் பாபு என்பவரை தெரியுமா என்றால் தெரியும். டேனியல் பாபுக்கு செல்வலெட்சுமி எழுதி கொடுத்த சொத்தினை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நான் சொத்தினை விலைக்கு வாங்குவதற்கு முன்பாகவே ரீ சர்வே மூலமாக கால் பூட்டு வரைபடம் உள்ளது அதனை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வரைபடத்திற்கு நான் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

எனது சொத்திற்கு மேற்கே உள்ள கால் எனது பட்டா நிலத்திற்குள் வரவில்லை என்றால் சரியல்ல. ரீசர்வே மூலமாக வரைபடம் சரியாக வரையப்பட்டு கால் போடப்பட்டுள்ளது நான் பொய்யாக சாட்சியம் அளிக்கவில்லை. எனக்கு பத்திரம் எழுதி கொடுக்கும் சமயத்தில் கால் என்று எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். 4 அடி உயரத்தில் 3 அடி வீதிற்கு ஆக்கிரமிப்பு செய்துவிட்டு தற்போது பொய்யாக ஒரு கையளவு கால் உள்ளதாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சொத்தினை சர்வேயர் மொத்தமாக அளந்துள்ளார் என்றால் சரியல்ல.

எனது 5 சென்ட்டை அளக்ககோரி மெமோ தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனது சொத்திற்கும் பிரதிவாதி சொத்திற்கும் நடுவே சுவர் எப்போது எழுப்பப்பட்டது என்றால் சுமார் 2 ½ வருடம் இருக்கும். நான் மேற்படி சுவர் கட்டும் சமயத்தில் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்தார்.

வாசாஆ 1ன் படி எனக்கு சொத்து கிடைத்ததாக நான் விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை மற்றும் அரசு தரப்பினர்களை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணைமுடிக்கப்படுகிறது.**